ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1655/7 - 2010 මැයි 25 වැනි අඟහරුවාදා - 2010.05.25

*1655/7 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ. 5/83.*

### *1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த யாப்பா அபேவர்த்தன,*
*கமத்தொழில் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2010, மே 07.*

*ஒழுங்குவிதிகள்*

*1. இவ்வொழுங்குவிதிகள் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. ''பீடைக் கட்டுப்பாட்டுச் சேவை'' எதுவும் பதிவாளரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின்றி பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை நடாத்துதலாகாது.*

*3. ''பீடை கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான உரிமமொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், இருபதினாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.*

*4. (1) பதிவாளர் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் மீது கட்டணத்துடன் சேர்த்து விண்ணப்பத்தை அங்கீகாரத்திற்காக குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும் ;*

*(2) பதிவாளர், குழுவிற்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுகின்ற போது அது தொடர்பாக பின்வருவன தொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(அ) விண்ணப்பதாரரின் தொழில்நுட்ப தகுதி ;*

*(ஆ) அத்தகைய சேவைகளை வழங்குவதற்கு விண்ணப்பதாரர் முறையான சாதனங்களைக் கொண்டுள்ளவரா என்பது ;*

(இ) விண்ணப்பத்தாரர் பீடைகொல்லிகளின் நச்சுத்தன்மையினது இயல்பையும், பீடைகொல்லிகளைப் பயன்படுத்துவதிலும், கையாள்வதிலும் கையுதிர்ப்பதிலும் சம்பந்தப்பட்ட அபாயங்களை அறிந்துள்ளவராக இருத்தல்.

(3) பதிவாளர், (2) ஆம் பந்தியின் உட்பந்திகள் (அ), (ஆ), (இ) என்பவற்றில் தரப்பட்டுள்ள விடயங்கள் இல்லையென நம்புவதற்கு அவருக்கு காரணங்கள் உள்ளடவிடத்து உரிமமொன்றை வழங்க மறுக்கலாம். உரிமமொன்று மறுக்கப்படுகின்றவிடத்து பதிவாளர் மறுப்பிற்கான காரணங்களை விண்ணப்பத்தாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

5. உரிமம் ஒவ்வொன்றும் -

(அ) ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், தற்போதைய உரிமக் காலம் கழிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், ஐயாயிரம் ரூபா புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட, வேண்டுதல் படிவத்தில் அது சார்பாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் புதுப்பிக்கவும்படலாம் ;

(ஆ) உரிமம் ஒன்றை வைத்திருப்பவர் பொறுப்பேற்பதற்கு அதிகாரமளிக்கப்படவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட வேலையின் வகுதிகளை குறித்துரைத்தல் வேண்டும் ;

(இ) பதிவு செய்யப்பட்ட வியாபார இடத்தையும் பீடைகொல்லிகள் எவ்வளவுகளில் களஞ்சியப்படுத்தப்படவுள்ளனவோ அவ்வளவுகளைக் குறித்துரைத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஈ) கொள்கலன்களில் ஒட்டப்படவேண்டிய சுட்டுத்துண்டில் குறித்துரைக்கப்பட்டவாறு பதிவு செய்யப்பட்ட பீடைகொல்லிகளின் பயன்பாட்டுக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

6. உரிமம் வைத்திருப்பவர் -

(அ) கொள்வனவுகள், பயன்படுத்தப்பட்ட பீடைகொல்லிகளின் அளவு மற்றும் அழித்தொழிக்க உத்தேசிக்கப்பட்ட பீடைகள் என்பன பற்றிய பதிவேடுகளை ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், தேவைப்படுத்தப்படும் போதெல்லாம் அவற்றைச் சோதனைக்காகப் பதிவாளருக்கு அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்வித்தல் வேண்டும் ;

(ஆ) பணியாட்டொகுதியினரால் பாதுகாப்பு வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதையும், ஏற்றிச் செல்லும்போதும், களஞ்சியப்படுத்தும்போதும், கையாளும்போதும் போதியளவு எச்சரிக்கை அடையாளங்கள் வெளிக்காட்டப்படுவதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(இ) பீடைக்கொல்லிகளின் தொழிற்பாடு, ஏற்றிச் செல்லல், களஞ்சியப்படுத்துதல், கையுதிர்த்தல் ஆகிய செயற்பாடுகளின்போது பணியாட்டொகுதியினரால் பாதுகாப்பு உடைகளும், உபகரணமும் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) பாதுகாப்பு உடைகளும், உபகரணமும் தகுந்த நிலைமையில் பேணப்படுவதனையும், சேதமடைந்து காணப்படின் உடனடியாக மாற்றீடு செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(உ) பணியாட்டொகுதியினர் ஆண்டொன்றில் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது இலங்கை மருத்துவப் பேரவையுடன் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவரால் விரிவான சுகாதாரப் பரிசோதனையொன்றுக்கு உட்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் பதிவேடுகள் பதிவாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் பரிசீலனை செய்யப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும் ;

(ஊ) ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் பயிற்சியை வழங்குதலும், பீடைக் கொல்லிகளின் அபாயகரமான தன்மை பற்றியும், ஆளொருவரின் சுகாதாரத்திற்கும், சூழலுக்குமான ஆபத்து பற்றியும் அவர்களுக்கு அறிவித்தலும் எல்லா நேரங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குக் கையாளப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுதலும் வேண்டும் ;

7. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பின்வருவனவற்றுக்காக, நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் முன்னறிவித்தல்மூலம், பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எவையேனும் பகிரங்க அல்லது தனியார் வளவுகளினுள் அல்லது பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகளை வழங்கும் ஆதனத்தினுள் பிரவேசிக்கலாம், அதனைச் சோதனையிடலாம் மற்றும் அதனை நுண்ணாய்வு செய்யலாம் :-

(அ) எவரேனுமாள் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியுள்ளாரா அல்லது மீறுகின்றாரா என்பதனை ஆய்ந்தறிவதற்கு ;

(ஆ) பீடைகொல்லிகளின் பயன்பாட்டை அல்லது பிரயோகத்தைச் சோதனையிடுவதற்கு அல்லது நுண்ணாய்வு செய்வதற்கு ;

(இ) பீடைக்கட்டுப்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் சாதனத்தை அல்லது எந்திரத்தொகுதியைச் சோதனையிடுவதற்கு ;

(ஈ) எவையேனும் பீடைகொல்லிகள் களஞ்சியப்படுத்தப்படும் அல்லது கையுதிர்க்கப்படும் இடங்களைச் சோதனையிடுவதற்கு ;

(உ) பீடைகொல்லிகள் காரணமாக மனிதருக்கு ஏற்படும் ஊறு, ஏதேனும் ஆதனத்துக்கு அல்லது சூழலுக்கு ஏற்படும் சேதம் என்பன பற்றிய முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்கு மற்றும் நுண்ணாய்வு செய்வதற்கு ;

(ஊ) பீடைகொல்லிகளின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ;

(எ) (i) விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்குப் பொருத்தமற்ற ஏதேனும் பீடை கொல்லியை ;

(ii) அவர்களினால் கொண்டுநடாத்தப்படுகின்ற பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் உபகரணத்தை, பதிவேடுகளை, அறிக்கைகளை, பொருட்பட்டியல்களை அல்லது வேறு ஆவணங்களை ;

கைப்பற்றுவதற்கு, தடுத்துவைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு,

8. உரிமம் வைத்திருப்பவர் -

(அ) நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, மறுக்குமிடத்து அல்லது கவனயீனமாகவிருக்குமிடத்து ;

(ஆ) பொய்யான உரிமைக்கோரிக்கைகளை அல்லது அறிக்கைகளைச் செய்துள்ளவிடத்து ; அல்லது

(இ) ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது சட்டத்தின் ஏற்பாட்டில் எதனையும் மீறுமிடத்து,

பதிவாளர் "குழுவுடனான" கலந்தாலோசனையுடன்,

(i) உரிமம் வைத்திருப்பவருக்கு குறிப்பிடப்பட்ட கருமங்களுக்கு நியாயமான காலத்திற்குள் காரணம் காட்டுமாறு அல்லது விளக்கம் தருமாறு அவரைத் தேவைப்படுத்தும் எழுத்திலான எச்சரிக்கையொன்றை வழங்குதல் வேண்டும் ;

(ii) நியாயமான ஏதுக்களின்மீதும் உரிமத்தை இடைநிறுத்தி வைத்தல் வேண்டும் ;

(iii) உரிமத்தைப் புதுப்பிக்க மறுத்தல் வேண்டும் ;

(iv) உரிமத்தை இரத்துச் செய்தல் வேண்டும் ;

9. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் நாளன்று பீடைக்கட்டுப்பாட்டுச் சேவைகளை நிறைவேற்றுகின்ற எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள் இவ்வொழுங்குவிதியின் நியதிகளின்படி உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

10. பதிவாளர், உரிமம் வைத்திருப்பவரின் பெயர் முகவரி, உரிமம் செல்லுபடியாகும் காலப்பகுதி ஆகிய விவரங்களுடன் எல்லா உரிமங்களினதும் இடாப்பைப் பேணுதல் வேண்டும்.

11. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"சட்டம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம் என்று பொருளாகும் ;

"பீடைக் கட்டுப்பாட்டுச் சேவை" என்பது, பின்வருவனவற்றைப் பயன்படுத்துவதன்மூலம் பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை நிறைவேற்றுகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் :-

(அ) புகைசார்ந்த பொருள் உட்பட மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லிகள் ;

(ஆ) புகைசார்ந்த பொருள் உட்பட பீடைகொல்லிகள் ; அல்லது

(இ) மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லிகள் தவிர்ந்த வேறு பீடைகொல்லி ;

"குழு" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பீடைகொல்லிகள் தொழிநுட்ப, மதியுரைக்குழு என்று பொருளாகும் ;

"பதிவாளர்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பீடைகொல்லிகள் பதிவாளர் என்று பொருளாகும்.

6- 183

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.